செய்தி வெளியீடு எண் : 1347 நாள் : 03.09.2024

<u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் வாரிய செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இன்று (03.09.2024), சென்னை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுடன் மாசு கட்டுப்பாடு வாரிய செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆய்வு கூட்டத்தின் போது பல்வேறு ஆலோசனைகளை வாரிய அலுவலர்களுக்கு தெரிவித்தார். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அடிக்கடி ஆய்வு செய்து அதன் செயல்பாட்டு திறனை உறுதி செய்ய வேண்டும் எனவும், செயல்படாத நிலையங்கள் பற்றிய தகவல்களை அரசுக்கு உடனடியாக அனுப்பவும் அறிவுறுத்தினார்.

மேலும் டேங்கர் லாரிகளில் கழிவு நீரை உரிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்வதை உறுதிபடுத்தவும், அத்துமீறி செயல்படும் வாகனங்களை போக்குவரத்து துறையுடன் இணைந்து வாகன உரிமத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். மணலி, எண்ணூர் பகுதியில் உடனடியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், அமோனியா மற்றும் குளோரின் போன்ற ஆபத்தான இரசாயனங்களை பயன்படுத்தும் தொழிற்சாலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும், அவ்வாறான இரசாயனங்களை பயன்படுத்தும் வழிமுறைகள் தொழிற்சாலைகளில் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை கண்காணிக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும் சாயத் தொழிற்சாலைகளை திறம்பட கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தினார். சாயத்தொழிற்சாலை மற்றும் தோல் தொழிற்சாலையில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் உப்பு கலவை கழிவினை அப்புறப்படுத்த மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதல்படி நடவடிக்கை எடுக்க கோரினார்.

இந்த ஆய்வு கூட்டத்தில், கல் குவாரிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்க குழு அமைக்கவும். அனைத்து மாவட்டங்களில் உள்ள கல்குவாரிகளை முறையாக ஆய்வு செய்து கண்காணிக்குமாறும் மேலும் சாயமிடும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தென்னை நார் தொழிற்சாலைகளை கண்காணிக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

மேலும், சிவப்பு வகை தொழிற்சாலைகளை சீரான இடைவெளியில் கண்காணிக்க வேண்டும் என வலியுறுத்தினார். மாவட்ட அலுவலங்களுக்கு அப்பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்களை நியமிக்க வேண்டும் எனவும் கூறினார்.

மேலும், இக்கூட்டத்தில் பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள், பிளாஸ்டிக் மற்றும் மின் கழிவுகளை முறையாக மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களை அதிக எண்ணிக்கையில் அமைக்க ஊக்குவிக்குமாறு கேட்டு கொண்டார். பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை சுற்றி போதிய எண்ணிக்கையிலான மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரினார்.

தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளுக்கு இசைவாணை /அங்கீகாரம் வழங்குவதைத் தவிர, பல்வேறு கழிவு மேலாண்மை நடைமுறைகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், பல்வேறு கழிவு மேலாண்மையின் நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு இணையத்தளத்தில் தொழிற்சாலைகள் பதிவு செய்துள்ளனவா என்பதை சரிபார்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தொழிற்சாலைகள் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியைப் பயன்படுத்தி பெருமளவில் மரங்களை வளர்க்க அறிவுறுத்த வேண்டும் என கூறினார். இறுதியாக தமிழகத்தில் சுற்றுச்சுழல் மாசு மற்றும் அதன் விளைவுகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டு கொண்டார். தொழிற்சாலைகளை கண்காணிப்பதுடன் இயற்கையை பாதுகாப்பதும் நம் கடமை என அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. பி. செந்தில் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவர் டாக்டர். எம். ஜெயந்தி, இ.வ.ப, வாரிய உறுப்பினர் செயலர் திரு. ஆர். கண்ணன் மற்றும் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu